10 - ஆம் வகுப்பு **அரையாண்டுத் தேர்வு - 2022**

நேரம் : 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 100

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15 X 1 = 15

1. காசிக்காண்டம் என்பது
அ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தின் மறுபெயர்
இ) காசி என்ற புலவர் படைத்த நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்துவது

2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

3. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது? அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

4. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப் போக்கர் கேட்டது............ வினா.
"அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது......விடை. அ) ஐயவினா, வினா எதிர் வினாதல்
ஆ) அறிவினா, மறைவிடை இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

5. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

6. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

7. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுது அ) காலம் மாறுவதை
ஆ) வீட்டைத் துடைப்பதை இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

8. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

9. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி அ) ஜால்ராஆ) பறை இ) உறுமி ஈ) நாகசுரம்

10. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் .........இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் .........
அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

11. 'பெரிய மீசை' சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

*வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்*
*பூவும் புகையும் மேவிய விரையும்*
*பகர்வோர் திரிதரு நகரவீதியும்*
*பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்*

12. இப்பாடலின் ஆசிரியர் யார்? அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள் இ) கண்ணதாசன் ஈ) அதிவீரராம பாண்டியர்

13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) காசிக்காண்டம் ஆ) கொய்யாக்கனி இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்

14. வண்ணமும் சுண்ணமும் - இலக்கணம் தருக.
அ) எண்ணும்மை ஆ) வினை முற்று இ) பெயரெச்சம் ஈ) தொழிற்பெயர்

15. விரை என்பதன் பொருள் அ) மனம் ஆ) மணம் இ) உள்ளம் ஈ) மேகம்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 21 - வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** 4 x 2 = 8

16. ***விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.***
அ) ஜுன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடுகிறோம்.
ஆ) நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து.

17. வசன கவிதை - குறிப்பு வரைக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

18. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?
19. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது? 20. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
21. 'விடும்' என முடியும் குறளை எழுதுக.

**பிரிவு- 2 எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 5 X 2 = 10

22. அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது. அண்ணன் புறப்படும் போது அம்மா வழியனுப்பியது. *(வழுவை வழாநிலையாக மாற்றுக)*
23. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக. (மதாற்பாவை, விருது, தோற்பவை, விருந்து)
அ) வாழ்க்கையில் ....... மீண்டும் வெல்லும். இதைத் தத்துவமாய்த் ..........கூத்து சொல்லும்.
ஆ) தெருக்கடத்தில் நடிகருக்குக் கைதட்டலே..... அதில் வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர்......
24. ***கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.*** மலை - மாலை
25. ***கலைச் சொற்கள் தருக.*** அ) Modern Literature ஆ) Consonant
**குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.** கல். ஆடு.
26. முன்னுக்குப் பின் - ***இச்சொற்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.***
27. ***பொருத்தமான நிறுத்தற்குறியிடுக.*** பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் கண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - மா.பொ.சி
28. ***எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.***
அ) எறும்புந்தன் கையால் எண்சாண் ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.

**பகுதி - III (மதிப்பெண்கள்: 18) பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி.** 2 X 3 = 6

29. 'புளியங்கன்று ஆழமா நடப்பட்டுள்ளது' - இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
30. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
31. **பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**
அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி அறம் அறக் கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்து அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.
***வினாக்கள் :*** அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை? ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது? இ) மதுரையில் உள்ள அவையம் பற்றிக் கூறும் நூல் எது?

**பிரிவு-2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. (34-க்கு கட்டாய வினா).**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை? 2X3=6
33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
34. 'அருளைப் பெருக்கி' - எனத் தொடங்கும் பாடலை எழுதுக. **(அல்லது)**
வெய்யோன் ஒளி - எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

**பிரிவு- 3 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2 X 3 = 6

35. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.
36. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
37. பொறியின்மை யார்க்கும் பழிஅன் றறிவறிந்
தாள்வினை இன்மை பழி - அலகிட்டு வாய்பாடு தருக.

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5 X 5 = 25

38. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. ***(அல்லது)***
ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.
39. அ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. ***(அல்லது)***
ஆ) உங்கள் தெருவில் பழுதடைந்த மின்விளக்குகளால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் தருக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. ***(அல்லது)***

ஆ) மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

41. ***நயம் பாராட்டுக.***

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மணச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர்வண்டு
பாடுவதும் வியப்போ - ***பாரதியார்***

42. மொழிபெயர்ப்பு.

The Golden Sun gets up early in the morning, and starts its bright rays to fade away the dark. The milky clouds starts their wandering. The colourful birds start twitting their morning melodies in percussio. The cute butterflies dance around the flowers. The flower fragrance fills the breeze. The breeze gently blowes everywhere and makes everything pleasant.

**குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா. பத்தியைப் படித்துப் பதில் தருக.**
பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழியக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம்கடந்தது. அவ்வாறு தொடர்ந்த பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில். உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

*வினாக்கள் :* 1) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
2) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது? 3) பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4)
5) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை? ***(அல்லது)***

ஆ) தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி ; திறன்பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை; காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்; எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி. இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்படவைக்க நீங்கள் செய்யும் முயற்சிளைப் பட்டியல் இடுக.

பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3 X 8 = 24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக. ***(அல்லது)***

ஆ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. ***(அல்லது)***

ஆ) கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே என்கிறது வெற்றி வேற்கை மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்றுவந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக. ***(அல்லது)*** ஆ) குறிப்புரைகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

---

மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும்:

மாணவ / மாணவியின் கையெழுத்து



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

## பத்தாம் வகுப்பு அரையாண்டுத் தேர்வு – 2022
## தமிழ் விடைக்குறிப்பு

சேலம்

| I | அனைத்து வினாக்களுக்கும் விடையளி | 15X1=15 |
|---|---|---|
| 1. | அ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் | 1 |
| 2. | ஈ) சருகும், சண்டும் | 1 |
| 3. | ஈ) இலா | 1 |
| 4. | இ) அறியா வினா, சுட்டு விடை | 1 |
| 5. | ஆ) தளரப் பிணைத்தால் | 1 |
| 6. | இ) உருவகம் | 1 |
| 7. | இ) இடையறாது அறப்பணி செய்தலை | 1 |
| 8. | ஆ) பெற்ற சுதந்திரத்தை பேணிக்காத்தல் | 1 |
| 9. | ஆ) பறை | 1 |
| 10. | ஈ) மன்னன், இறைவன் | 1 |
| 11. | இ) அன்மொழித்தொகை | 1 |
| | பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்க விடையளிக்க | |
| 12. | ஆ) இளங்கோவடிகள் | 1 |
| 13. | இ) சிலப்பதிகாரம் | 1 |
| 14. | அ) எண்ணும்மை | 1 |
| 15. | ஆ) மணம் | 1 |

மா.சுந்தரராஜன்
9566585602

### குறுவினா – பிரிவு – 1 –

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. (மதிப்பெண்கள்- 18) **4X2=8**

| வினா எண் 21ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும் | | |
|---|---|---|
| 16. | **விடைக்கேற்ற வினா அமைக்க**<br>அ) எந்நாளை உலகக் காற்று நாளாக கொண்டாடுகிறோம்?<br>ஆ) நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலை எது?<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | <br>1<br>1 |
| 17. | **வசன கவிதை**<br>❖ உரைநடையும் கவிதையும் இணைந்து **யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு** உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது.<br>❖ ஆங்கிலத்தில் Prose Poetry ( free verse ) என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. | 1<br>1 |
| 18. | **சிரித்து பேசினர்:**<br>❖ சிரித்து சிரித்து பேசினர்.<br>❖ உவகை காரணமாக அடுக்குத்தொடரானது. | <br>1<br>1 |
| 19. | **மெய்க்கீர்த்தி**<br>❖ அரசர்கள் தங்களின் வரலாறும் பெருமையும் காலம் கடந்து கடந்தும் அழியாமல் பாதுகாக்கவே ஆகும். | 2 |
| 20. | **அமர்ந்தான்**<br>❖ அமர் +த்(ந்) +த் +ஆன்<br>❖ அமர் - பகுதி, த் - சந்தி; த்(ந்) - ந் ஆனது விகாரம்; த் - இறந்தகால இடைநிலை; ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி | 1<br>1 |
| 21. | **திருக்குறள்**<br>முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை<br>இன்மை புகுத்தி விடும். | 2 |

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| பிரிவு – 2<br>எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி | | 4X2=8 |
| 22. | வழுவை வழாநிலையாக மற்றுக<br>❖ அண்ணன் நேற்று வீட்டிற்கு **வந்தான்.**<br>❖ அண்ணன் புறப்படும்போது அம்மா **வழியனுப்பினார்.** | 1<br>1 |
| 23. | **பொருத்தமானவற்றை சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**<br>அ) தோற்பவை, தோற்பாவை<br>ஆ) விருது, விருந்து | 1<br>1 |
| 24. | இருசொற்களைப் பயன்படுத்தி தொடர் அமைக்க<br>நேற்று **மாலை மலைக்**கோவிலுக்குச் சென்றேன்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 2 |
| 25. | **கலைச்சொல்**<br>அ) **Modern Literature** - நவீன இலக்கியம்<br>ஆ) **Consonant** - மெய்யெழுத்து<br>**(செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா)**<br>கற்குவியல், ஆட்டுமந்தை | 1<br>1<br><br>1+1 |
| 26. | **பொருத்தமான தொடர் அமைக்க**<br>திருடன் காவலரிடம் **முன்னுக்குப்பின்** முரணாக பதிலளித்தான்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 2 |
| 27. | **நிறுத்தற்குறி இடுக.**<br>பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூற, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்க அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி | 1<br>1 |
| 28. | தமிழெண்களை எழுதுக.<br>அ) எட்டு – அ<br>ஆ) நான்கு, இரண்டு – ச, உ | 1<br>1 |
| பிரிவு – 1<br>எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி | | 2X3=6 |
| 29. | **இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்கள்**<br>❖ வயலில் **நெல் நாற்று** நட்டார்கள்<br>❖ **தென்னம்பிள்ளை** வாங்கி வந்தேன்.<br>❖ காட்டில் **பனைவடலியைப்** பார்த்தேன்.<br>❖ **சோளப்பைங்கூழ்** பார்ப்பதற்க அழகாக உள்ளது.<br>❖ தோட்டத்தில் **வாழைக்கன்று** நட்டேன்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 1<br>1<br>1 |
| 30. | **தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்**<br>❖ **இடம்** : மாநகராட்சிக் கூட்டத்தில் மாநகரத் தந்தை செங்கல்வராயன் முன்னிலையில் ம.பொ.சிவஞானம் கூறியது.<br>❖ **பொருள்** : தலையைக் கொடுத்தேனும் தலைநகரத்தைக் காப்போம்.<br>❖ **விளக்கம்** : ஆந்திர மாநிலம் பிரியும் போது அதோடு இருந்த சென்னையைத் தமிழகத்திற்காக மீட்க வேண்டும் என்று போராடிய போது மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்று மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூடியது. அதில் பங்கெடுத்த மா.பொ.சி. அவர்கள் சென்னையைப் பற்றிய தீர்மானத்தை முன் மொழிந்த போது ‘தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்’ என்று முழங்கி தீர்மானத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினார். | 1<br><br>1/2<br><br>1<br>1/2 |